THE HON. SRI V. RAMAIAH : (a) Twenty-eight only (28).
(b) Eighteen only (18).

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், சர்க்கரை வினியோகக் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்கத் தயக்கம் ஏன்? அதில் உள்ள கஷ்டங்கள் என்ன?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது கண்ட்ரோலை நீக்குவதாக இல்லை. சர்க்கரைப் பற்றுக்குறை இருப்பதால், கண்ட்ரோல் நீடிக்க வேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை வினியோகிப்பவர்கள் ஏதாவது குற்றம் செய்தார்கள் என்பதற்காக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பர்மிட் ரத்து செய்யப்படுகிறது. அவர் வியாபாரி. அவருடைய பர்மிட் ரத்து செய்யப்படும் போது, அந்தப் பக்கத்தில் இருக்கும் மக்களுக்கு, அந்த வழக்குத் திரும் வரை சர்க்கரை கிடைக்காமல் போகும் நிலைதான் இருக்கிறது. வழக்குப் போடப்பட்டிருக்கும் வியாபாரியைத் தவிர வேறு அங்கே உள்ள ஒருவருக்குப் பர்மிட் வழங்கி, மக்களுக்கு சர்க்கரை கிடைக்கச் செய்ய உடனடியாகக் கண்டிப்பாக உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், சாதாரணமாக ஒரு லைசென்ஸ் ரத்து செய்யப்படும்போது, பொது மக்களுக்குப் பாதகம் வராத முறையில்தான் செய்யப்படுகிறது; மற்றவர்களுக்கு வினியோகம் செய்யும் பொறுப்பு கொடுக்கப்படுகிறது. எங்காவது குறைபாடுகள் இருந்தால், அதை எனக்கு எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

### இயங்கு நீதி மன்றங்கள்

* 268 கேள்வி—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடமாடும் கோர்ட் வண்டிகள் சென்னையில் எத்தனை இயங்கி வருகின்றன?

(இ) அவைகளில் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை? தண்டனையில் முடிந்தவை எத்தனை?

(உ) மற்ற மாவட்டங்களுக்கும் இதனை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) சென்னை நகரத்தில் இயங்கும் நீதிமன்றங்கள் (Mobile Courts) மூன்று பணியாற்றி வருகின்றன.

(இ) இயங்கும் நீதி மன்றங்களில் 1965-ம் ஆண்டு இறுதி வரை 3,35,295 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுள், 2,95,065 வழக்குகள் தண்டனையில் முடிந்தன.

12th March 1966]

(உ) இயங்கும் நீதி மன்றங்களை மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் இப்போது அரசாங்கத்திடமில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கோர்ட்டுகளில் எந்த விதமான கேசுகள் அதிகமாக வந்திருக்கின்றன? எம்மாதிரியான கேசுகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றன?

**THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR :** Cases tried here are generally cases where the accused pleads guilty under the City Police Act.

**திரு. செ. மாதவன் :** இந்த இயங்கும் நீதி மன்றங்கள் நடைபெறும் முறைகளைப் பற்றி அரசாங்கம் பரிசிலித்ததா? அவை சரியாக இயங்குகின்றனவா என்பதைப்பற்றி உயர் நீதி மன்ற நீதிபதியோடு கலந்து ஆலோசித்ததா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** சார், இந்தக் கோர்ட்டுகள் இருப்பது மிகவும் சௌகரியமாக இருக்கிறது. மூன்று கோர்ட்டுகள் இருக்கின்றன. தனியாக டிராபிக் கேசுகள் வருகின்றன அல்லவா, அவற்றிற்கென்று ஒரு நடமாடும், மொபைல் கோர்ட், நிறுவ வேண்டும் என்று யோசித்து, ஹைக் கோர்ட்டுக்கு அவர்கள் யோசனைக்கு சென்று இருக்கிறது. பிறகு தான் ஒரு முடிவு எடுக்கப்படும். அது மாத்திரமல்ல, மதுரைக்கு ஒரு கோர்ட்டு வேண்டும் என்றும் கேட்கிறார்கள். ஆகவே, இவையெல்லாம் நல்ல முறையிலே நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** சார், சில வழக்குகளை எதிர்த்து வழக்காட வேண்டியிருக்கின்றது. நடமாடும் கோர்ட்டுகளில் வக்கீல்களும் செல்ல வசதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** சார், இதிலே சவாரி செய்வது என்பதல்ல நோக்கம். மூன்று இடங்கள் என்றால், அவை எக்மோர், ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை என்கிற மூன்று இடங்களிலும், போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் நிறுத்தி வைத்து நடத்துகிறார்கள். அதிலே வக்கீல்கள், மாஜிஸ்டிரேட்டுகள் சவாரி செய்வது என்பதல்ல நோக்கம். அவர்களெல்லாம் அங்கங்கே போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** இப்படிப்பட்ட நிலையில், நிரந்தரமாக இரண்டு வக்கீல்களை கட்சிக்காரர்களுக்கு ஆஜராவதற்கு என்று அமைத்து உதவ வழிவகை செய்ய சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா இல்லையென்றால் அந்த உத்தேசத்தைக் கவனிக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** அது அவரவர்கள் சௌகரியம்போல வக்கீல்களை ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

[12th March 1966

திரு. சா. கணேசன் : அவர்கள் அங்கே தயாராக இருந்தால், கட்சிக்காரர் வேண்டும் என்றால் அவர்களை வைத்துக்கொள்ள சௌகரியமாக இருக்குமே என்று சொன்னேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த நடமாடும் கோர்ட்டு களிலே, வண்டியின் உள்ளேயே நடத்துகிறார்களா, அல்லது போலீஸ் ஸ்டேஷன் உள்ளே வழக்கு விசாரணை செய்கிறார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : என்னை விட அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். எங்கே கோர்ட்டு இருக்கிறதோ அங்கேதான் நடக்கும். வீதியில் நடக்கிறதா, உள்ளே நடக்கிறதா என்றால், கோர்ட்டு எங்கே இருக்கிறதோ அங்கே விசாரணை நடக்கும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, நல்ல முறையிலே இயங்கும் நீதி மன்றங்கள் நடைபெறுகின்றன என்பதால், அதை எல்லா முனிசிபல் நகரங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதைத் தான் சொன்னேன். இப்போது இருப்பது சென்னை நகரத்தைப் பொருத்து இருக்கிறது. தற்சமயம் அதை விரிவு படுத்த யோசனை எதுவும் இல்லை.

### சப் மாஜிஸ்ட்ரேட்டுகள்

*269 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பணிபுரியும் சப்-மாஜிஸ்ட்ரேட்களையும், A.P.P.I. -களையும் கெஜட்ட் ரேங்குக்கு உயர்த்தும் திட்டம் ஏதும் அரசினரின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், பரிசீலனை எப்போது முடிவடையும் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) சப்-மாஜிஸ்ட்ரேட்களை கெஜட் பதிவுள்ள தரத்துக்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கக் குற்ற விசாரணை (1-ம் தரம்) உதவி வழக்கறிஞர்களைப் பொறுத்த வரை அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

(இ) இதைப்பற்றி முடிவுக்கு வர இன்னும் சில காலம் ஆகும்.

திரு. சே. மாதவன் : தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட் களைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னால் சட்டக் கமிஷன் பரிசீலித்து சில அறிவுரைகளைக் கூறியிருக்கிறது. சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு உடனடியாக டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ராங்க் கொடுக்கவேண்டும் அல்லது சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் அல்லது ப்ரமோஷனுக்கு 'லிமிடெட் ஸ்கோப்' தான் இருக்கிறது, அதையாவது இன்க்ரீஸ் பண்ண வேண்டும் என்று